சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள் :03.10.2024
வா.சா.1 -மலைச்சாமி S/o.வீரணன்
O.S No. 247 /2022:
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

நான் 6ம் வகுப்பு வரை படித்துள்ளேன். பால் வியாபாரம் செய்து வருகிறேன். நான் பால் கொள்முதல் செய்து வீடு வீடாக சென்று பால் ஊற்றி வருகிறேன். நான் பால் வியாபாரம் செய்யும் போது தவணை முறையில் தொகையை பிடித்துக்கொண்டு பட்டுவாடா செய்வதுண்டு என்றால் சரியல்ல. இந்த வழக்கின் பிரதிவாதியான முருகேசனை எனக்கு சுப்புராம் என்பவர் அறிமுகம் செய்து வைத்தார் அதனால் தெரியும். சுப்புராம் பால்வியாபாரம் செய்து வருகிறார் என்றால் சரிதான். பால் பற்றாக்குறை ஏற்பட்டால் அவரிடம் வாங்கி தான் ஊற்றுவேன். வா.சா.ஆ.2 கிரைய ஒப்பந்தத்தில் சுப்புராம் சாட்சியாக கையெழுத்திட்டுள்ளார் என்றால் சரிதான். நான் சுப்புராமிடம் எனக்கும், என் மைத்துனருக்கும் இடம் வேண்டும் என்று கேட்டேன். அவர் பிரதிவாதியை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். பிரதிவாதி அரும்பனூர் பஞ்சாயத்தில் இருந்து வருகிறார். வா.சா.ஆ.2 கிரைய ஒப்பந்தத்தில் அரும்பனூர் முகவரியை குறிப்பிட்டு தான் பிரதிவாதியின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 13.11.2019ம் தேதி அன்று நான் மிலிட்டரிகாரரிடம் கிரைய ஒப்பந்தம் போட்டேன். அவர் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. சாட்சியாக கையெழுத்திட்டுள்ள நபர்களை விசாரித்தால் உண்மை தெரியும் என்றால் சரிதான். 25.02.2022 தேதியிட்ட பணம் பிடித்தம் செய்து கொள்வது தொடர்பாக ஆவணம் சாட்சியிடம் காட்டப்பட்டது. அதை பார்வையிட்டு சாட்சி அதில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்று

ஒப்புக்கொள்ளவே மேற்படி ஆவணம் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

Sd./M.Samundeeswari Prabha
Sub Judge,
Melur